**SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD**

**ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**

**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய போட்டிரீதியான விலைமனுக்கோரல்

## EDB/PU/NCB/2025/06

## பணிக்குழுவினர் போக்குவரத்து – 2026

01. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் கீழ் குறிப்பிடப்பட்ட வீதிகளில் ஓர் ஆண்டு காலத்திற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணிக் குழுவுக்கு (தலைமை அலுவலகம்) குளிரூட்டப்பட்ட அல்லது குளிரூட்டப்படாத பஸ்/ வேன் வண்டிகள் மூலம் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு பயணிகள் போக்குவரத்துச் சேவையின் வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | பஸ் பாதை | ஆரம்பிக்கும் இடம் |
|---|---|---|
| 01. | களுத்துறை புதிய காலி வீதி நவம் மாவத்தை | களுத்துறை நகரம் |
| 02. | மேல் போமேரிய கடுவளை ஊடாக நவம் மாவத்தை (லோலெவல் வீதி) | மேல் போமேரிய சந்தி |
| 03. | பாதுக்க கொடகம ஊடாக நவம் மாவத்தை | பாதுக்க |
| 04. | ஹோமாகம ஹைலெவல் வீதி ஊடாக நவம் மாவத்தை | ஹோமாகம நகர் |
| 05. | கொட்டுகொட ஜாஎல வீதி ஊடாக நவம் மாவத்தை | கொட்டுகொட சந்தி |
| 06. | குருகொட, ஹொரண, பண்டாரகம ஊடாக நவம் மாவத்தை (நவம் மாவத்தை தொடக்கம் அதிகபட்சம் 50km வரை) | குருகொட |
| 07. | தித்வெல் மங்கட, பஸ்யால சந்தி கண்டி வீதி ஊடாக நவம் மாவத்தை (நவம் மாவத்தை தொடக்கம் அதிகபட்சம் 50km வரை) | தித்வெல் மங்கட |

02. விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதி தொடக்கம் 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

03. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை www.srilankabusiness.com இணையதளம் “Announcement” இன் கீழ் மாதிரி விலைமனு ஆவண தொகுதியை தரவிறக்கம் செய்ய முடியும்.

04. மீளளிக்கப்படாத 2000 ரூபா கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் 5000 ரூபா வைப்பு ஒன்றை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பெயருக்கு இலங்கை வங்கி லேக் வியுவ் கிளையில் பேணப்பட்டு வரும் இலக்கம் - 306605 கணக்கிற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட வங்கி பற்றுச்சீட்டு அல்லது ரசீதை விலைமனு ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். (வங்கி பற்றுச்சீட்டு அல்லது ரசீதின் மூலப் பிரதியை இணைக்காத விலைமனுக்கள் செல்லுபடியான விலைமனுவாக ஏற்கப்படமாட்டாது)

05. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, அனுப்புகின்ற உறையில் இடது பக்க மேல் மூலையில் ‘‘பணிக்குழுவின் போக்குவரத்து – 2026’’ என்று குறிப்பிட்டு 2025.12.09 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு ‘‘தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, பெறுகை பிரிவு, 6ஆவது மாடி, NDB-EDB கோபுரம், இலக்கம் 42, நவம் மாவத்தை, கொழும்பு 02’’ என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது 6ஆவது மாடியின் பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற பின் மு.ப. 10.30 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

06. கேள்விமனுக்களை ஏற்கும் இறுதி நேரத்தின் பின் சமர்ப்பிக்கும் கேள்விமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு வசமானது.

07. விலைமனுக்களுக்காக சமர்ப்பிக்கும் பஸ்/ வேன் வண்டிகள் அடிப்படை தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும், அதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வாகனத்தை அதற்கு தொடர்புடைய ஆவணங்களுடன் எடுத்து வருதல் வேண்டும்.

08. விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு பங்கேற்பதற்கு விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அனுமதி அளிக்கப்படும்.

09. மேலதிக விபரங்களுக்கு 0112300702 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பெறுகை பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே. திஸ்னா பிரியங்கிக்கா அவர்களை அழைக்கவும்.

**தலைவர், தலைமை நிறைவேற்று அதிகாரி**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

**NDB-EDB கோபுரம்: 42, நவம் மாவத்தை, கொழும்பு 02. இலங்கை**

**தொலைபேசி: +94112300700**

**இணையதளம்: https://www.srilankabusiness.com**